# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்
(நிறைவேற்றுநர் வகை தரம் III)

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சில் சட்ட அலுவலர் பதவிக்கு பின்வரும் தகுதிகளுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக்குழு மூலம், நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில், அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள இலக்கம் 6 இன்கீழ் குறிப்பிடப்படும் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்பவே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும்.

இந்த நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

2. **தகைமைகள்** :

(i) *கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சட்டமாணிப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) *அனுபவம்*.- உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்தபின் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத செயற்படு நிலையிலான தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(iii) *உடல் தகைமை*.- பதவியின் கடமைகளினை இலங்கையின் எப்பாகத்திலும் ஆற்றுவதற்கான உடல் மற்றும் உள தகைமைகளைச் சகல விண்ணப்பதாரிகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *ஏனையவை* :

* தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
* பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று கட்டாயம் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியத் திட்டத்திற்குட்பட்டதும் ஆகும். விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு கட்டாயம் பங்களிப்பு செலுத்தப்படல் வேண்டும்.

(ii) நியமனத் திகதியிலிருந்து மூன்று (3) வருடங்கள் தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்டதற்கிணங்க முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில், சட்ட அலுவலர் பதவி தரம் III இற்கு நியமனம் பெற்ற காலத்திலிருந்து மூன்று (3) வருடங்களுக் குள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 07/2007 இற்கும் மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கும் ஏற்ப பதவியில் இணைந்து 5 வருட காலத்தினுள் சேவையில் இணைக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்ட தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்நியமனமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நடைமுறைகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்கு ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 என்ற மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானதாகும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்ட (2006/6 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையினது SL - 1 - 2006 சம்பளப் பிரிவிற்கு உட்பட்டது.)

6. **கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கான புள்ளிகள் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்** :-

| இல. | இங்கு குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புள்ளிகள் வழங்குவதற்கு ஆராயப் படும் | | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட சட்ட மாணிப் பட்டம் | | |
| | - முதலாம் வகுப்பு நிலைச்சித்தி | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு நிலையில் மேல்தரச் சித்தி | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு நிலையில் கீழ்தரச் சித்தி | 10 | |

| இல. | இங்கு குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புள்ளிகள் வழங்குவதற்கு ஆராயப் படும் | | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் முதல் வகுப்பு நிலையில் சித்தி பெற்றமைக்கு | 15 | |
| | சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு நிலையில் சித்தி பெற்றமைக்கு | 10 | |
| | **குறிப்பு**.- 1997 ஆம் ஆண்டிற்கு முன் இறுதிப் பரீட்சையில் விசேட சித்தி யுடன் தேர்ச்சிபெற்றவர்களுக்கு மட்டுமே 10 மதிப்பெண்கள் வழங்கப் படும். (உச்ச தகைமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். சட்டமாணிப் பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் தகைமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 2 | மேலதிக தொழில்சார் தகைமைகள் : | | 15 |
| | சட்டத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் சம்பந்தப்பட்ட துறை யில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத கற்கைநெறிக்கான முதுகலைமாணிப் பட்டம்) (ஒவ்வொரு டிப்ளோமாவுக்குமாக தலா 5 புள்ளிகள்) | | |
| | சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக் கப்பட்ட நிறுவனத்தினால் 6 மாத காலத்திற்குக் குறையாத டிப்ளோமா கற்கைநெறிக்கு (ஒவ்வொரு டிப்ளோமாவுக்குமாக தலா 3 புள்ளிகள்) | | |
| | சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக் கப்பட்ட நிறுவனத்தினால் 3 மாத காலத்திற்குக் குறையாத சான்றிதழ்சார் கற்கைநெறிக்கு (ஒவ்வொரு டிப்ளோமாவுக்குமாக தலா 2 புள்ளிகள்) | | |
| 3 | **மேலதிக அனுபவம்** : | | 30 |
| | ஒரு வழக்கறிஞராக அரசாங்க சேவையில் அல்லது தனியார் சேவையில் சேவை யாற்றிய அனுபவம் - 6 மாதங்களுக்கு மேற்பட்டதும் ஒரு வருடத்திற்கு குறை வானதுமாயின் -2 புள்ளிகள் | | |
| | ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் 5 புள்ளிகள் அடிப்படையில் உச்சப் புள்ளிகள் 30 ஆகும் (ஒரு வழக்கறிஞர் என்ற அடிப்படை தகைமையைப் பெற் றுக்கொள்வதற்கு குறித்த பதவியில் 3 வருட காலங்கள் கடமையாற்றி யிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.) (மேலதிக அனுபவங்கள் யாவும் நீதிபதி அல்லது சனாதிபதிச் சட்டத்தரணி அல்லது 20 வருடங் களுக்கு குறையாத வழக்கறிஞர் ஒருவ ரால்பெற்றுக்கொண்ட ஒரு சான்றிதழ் மூலமே நிரூபிக்கப்படல் வேண்டும்.) | | |

| இல. | இங்கு குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புள்ளிகள் வழங்குவதற்கு ஆராயப் படும் | | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 4 | **கணினிசார் அறிவு** : | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டப் படிப்புக்காக ஒரு பிரதான பாடமாக தகவல் தொழில் நுட்பத்தினைப் பின்பற்றியிருத்தல். | 15 | |
| | அரசாங்க நிறுவனமாக அங்கீகரிக்கப் பட்ட ஒரு நிறுவனத்தில் ஒரு வருடத் திற்கு குறையாது தகவல் தொழில் நுட்பத் துறையில் டிப்ளோமா கற்கை நெறி அல்லது 1,500 மணித்தியாலங் களை உள்ளடக்கிய கற்கைநெறி | 10 | |
| | அரசாங்க நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையில் சான்றிதழ் கற்கை நெறியினைப் பின்பற்றியிருத்தல் : | | |
| | - 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 5 | **ஆங்கிலத்தில் தேர்ச்சி** : | | 15 |
| | ஆங்கில மொழிஊடாக பின்தொடரப்பட்ட பட்டப்பின் படிப்பு/பட்டப்படிப்பு/சட்டத் துறையில் பட்டப்பின் படிப்பு/சட்ட மாணிப் பட்டம் | 15 | |
| | (பரீட்சைத் தாள்களில் காணப்படும் எல்லா வினாக்களுக்கும் ஆங்கில மொழி ஊடாக விடைகள் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்.) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசாங்க நிறு வனமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவ னத்தில் ஆங்கில மொழியில் டிப்ளோமா கற்கைநெறியினைப் பின் பற்றியிருத்தல் (ஒரு வருடம்/ 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசாங்க நிறு வன மாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவ னத்தில் ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறியினைப் பின்பற்றியிருத்தல் : | | |
| | - 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 6 | ஒரு நேர்முகத் தேர்விற்கான திறமை யினைக் கொண்டிருத்தல் : | | 5 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளை இனங்காணுதல்**.- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வழங்கியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வில், முறைப்படி உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலம் பிரதிகள் கட்டாயமாக வழங்கப்படல் வேண்டும்.

